முதன்மைச் செயலர்/ஆணையர் (வ.வ.)
14 ஆக 2014
எழிலகம், சென்னை-600 005

18 ஆக 2014

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "அஞ்சான்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

அரசாணை (டி) எண். 327

நாள். 14.08.2014
ஜய, ஆடி 29,
திருவள்ளுவர் ஆண்டு, 2045

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/24910/2014, நாள் 12.08.2014 தேர்வுக்குழு எண்.42/2014–2015.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச்செயலர் / வணிகவரி ஆணையர், மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "அஞ்சான்" திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களும் "அஞ்சான்" என்ற திரைப்படம் கேளிக்கை விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. "அஞ்சான்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | எஸ். ரசியா, இணை ஆணையர் (செயலாக்கம்), இடை மாநில புலனாய்வுக் குழு) சென்னை –6. | இத்திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றிருந்தாலும், திரைப்படத்தில் வன்முறை காட்சிகள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளது என்பதாலும், ஆபாச நடன காட்சிகள் இடம் பெற்றுள்ளது என்பதாலும், பிற மொழி |

| | | |
|---|---|---|
| | | அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதாலும், அரசாணையின் நிபந்தனைக்கு உட்படாததாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 2. | ந.அருள், இயக்குநர் (மொழி பெயர்ப்பு) தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தித்துறை | திரைப்படத்திற்கு தமிழ் தலைப்பு இருந்தாலும் 'U' சான்றிதழ் பெற்றிருந்தாலும், திரைப்படத்தில் ஆங்கிலம் மற்றும் இந்திச் சொற்கள் எண்ண முடியாத அளவில் உள்ளது என்பதாலும், கடு வன்முறை காட்சிகள் மிக அழுத்தமாக உள்ளது என்பதாலும், இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | C.V. ராஜேந்திரன், இயக்குநர் | 'ஒரு இந்தி படத்தில் தமிழ் வசனங்கள்', திரைப்படத்தில் வன்முறை காட்சிகள் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதாலும், சமுதாயத்திற்கு விரோதமான திரைப்படம் என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கக் கூடாது என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | R.V. உதயகுமார், இயக்குநர் | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் உள்ளது என்றாலும், 'U' சான்றிதழ் உள்ள திரைப்படம் என்றாலும், திரைப்படத்தில் வன்முறை காட்சிகள் அளவுக்கு அதிகமாக உள்ளது என்பதாலும், திரைப்படத்தின் பாடல் காட்சிகளில் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் பிரயோகம் உள்ளது என்பதாலும், அஞ்சான் திரைப்படம் வரி விலக்கு பெற தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | வாணி ஜெயராம், பின்னணிப் பாடகி | திரைப்படத்தில் வன்முறை அதிகமாக உள்ளது என்பதாலும், திரைப்பாடல்களில் ஆங்கில வார்த்தைகள் நிறைய உள்ளன என்பதாலும், திரைப்படத்தில் வேற்று மொழி வசனங்களும் நிறைய உள்ளன என்பதாலும், இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கிற்காக பரிந்துரைக்கவில்லை என பரிந்துரை செய்துள்ளார். |
| 6. | L.R.ஈஸ்வரி, பின்னணிப் பாடகி | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் இருக்கிறது என்றாலும், 'U' சான்றிதழ் பெற்றது என்றாலும், ஹிந்திப்படத்தை தமிழில் பார்ப்பது போல் இருக்கிறது என்பதாலும், திரைப்படத்தில் சண்டைக் காட்சிகள் மிக அதிகமாக இருக்கிறது என்பதாலும், அரசாணையின் நிபந்தனைக்கு தகுதியானது அல்ல என்பதாலும், இத்திரைப்படத்தின் வரி விலக்கிற்கு பரிந்துரை செய்ய முடியாது என பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், "அஞ்சான்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் "அஞ்சான்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/8/2014
பிரிவு அலுவலர்.